*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*15 08 2025  FRIDAY   12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

- *நாட்டின் 79வது சுதந்திர தின விழா இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.*
- *நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, அடுத்த பத்தாண்டுகளுக்குள் சக்திவாய்ந்த ஆயுதங்களை தயாரிக்கும் நோக்கில், சுதர்ஸன் சக்ரா இயக்கம் தொடங்கப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*
- *தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொடர்ந்து 12வது முறையாக தேசியக்கொடியை ஏற்றி வைத்தது பெருமைமிக்க தருணம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*
- *கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இணையவழி திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.*
- *ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*>>>>><<<<<*

*நாட்டின் 79வது சுதந்திர தினவிழா இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.*

*தில்லி, செங்கோட்டை கொத்தளத்தில் நடைபெற்ற வண்ணமிகு நிகழ்ச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, தேசியக்கொடியை ஏற்றிவைத்து, பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.*

*இந்த நிகழ்ச்சியில், ராணுவ பேண்ட் வாத்திய இசைக்குழுவில் முதல் முறையாக அக்னிவீரர்களும் பங்கேற்றனர்.*

*(சவுண்ட் பைட் – மியூசிக் 18 செகண்ட்ஸ்)*

*சுதந்திர தின உரையாற்றிய பிரதமர், ஆப்பரேஷன் சிந்தூர் மூலம், இந்திய ராணுவத்தின் வலிமையை உலக நாடுகள் உணர்ந்திருப்பதாக கூறினார்.*

*ஒரே நாடு – ஒரே அரசியல் சாசனம் என்பதை முழுமையாக செயல்படுத்தும் வகையிலேயே, ஜம்மு கஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் அரசியல் சாசனப் பிரிவு 370 ரத்து செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.*

*இந்தியாவை, சுயசார்புடைய மற்றும் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் நோக்கில் அரசு பணியாற்றி வருவதாக கூறிய பிரதமர். விமானங்களுக்கான ஜெட் எஞ்சின்களை இந்தியாவிலேயே தயாரிக்க முயற்சி மேற்கொள்ளுமாறு இளம் விஞ்ஞானிகள், பொறியாளர்கள் உள்ளிட்டோருக்கு வேண்டுகோள் விடுத்தார்.*

*செமி கண்டக்டர் உற்பத்தியை ஒரு இயக்கமாக அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சிப்புகள் சந்தையில் விற்பனைக்கு வரும் என்றும் அவர் கூறினார்.*

*நாட்டின் எரிபொருள் தேவைக்காக வெளிநாடுகளைச் சார்ந்திருப்பதோடு, இவற்றை இறக்குமதி செய்ய பல லட்சம் கோடி ரூபாய் செலவிடப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*இதனை தவிர்க்க, எரிசக்தி துறையில் சுயசார்பை அடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய திரு. நரேந்திர மோடி, நாட்டின் சூரியசக்தி மின்உற்பத்தி கடந்த 7 ஆண்டுகளில் 30 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.*

*2047ஆம் ஆண்டுக்குள், அணுமின்சார உற்பத்தி திறனை 10 மடங்கிற்கும் அதிகமாக உயர்த்த அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கில், ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான வேலைவாய்ப்புத் திட்டம் இன்று முதல் செயல்படுத்தப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*இதன்மூலம், தனியார் துறையில் புதிதாக பணியில் சேரும் இளைஞர்களுக்கு, மத்திய அரசு 15 ஆயிரம் ரூபாய் வழங்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.*

*இந்திய விமானப்படை வீரர் சுபான்ஷு சுக்லா, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வெற்றிகரமாக சென்று திரும்பியது குறித்து பெருமிதம் தெரிவித்த அவர், வரும் காலங்களில்*

ககன்யான் விண்கலத்தை அனுப்பவும், இந்தியாவிற்கென பிரத்யேக விண்வெளி நிலையம் ஒன்றை அமைக்கும் பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

எதிரிகளால் நாட்டிற்கு ஏற்படும் அச்சுறுத்தலை தவிர்க்க, அடுத்த பத்தாண்டுகளுக்குள் சக்திவாய்ந்த ஆயுதங்களை உருவாக்கும் நோக்கில், சுதர்ஸன் சக்ரா என்ற இயக்கம் தொடங்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு வந்து, 8 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள வேளையில், இதனை மறுஆய்வு செய்ய இதுவே உரிய தருணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் நலன்களில் அரசு ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது என்று உறுதிபட தெரிவித்த பிரதமர், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அரணாக அரசு திகழும் என்றும் தெரிவித்தார்.

அனைத்து துறைகளிலும் நாடு சுயசார்பை அடையவும், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை பயன்படுத்தவும் அரசியல் தலைவர்களும், முக்கிய பிரபலங்களும் குரல் கொடுக்க வேண்டும் எனவும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

இந்த ஆண்டு சுதந்திர தின விழாவில் உள்ளாட்சி பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள், பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள் உள்ளிட்ட 5 ஆயிரம் பேர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

அவர்களுடன் கலந்துரையாடிய பிரதமர், வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

முன்னதாக பிரதமர். தில்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

>>>>><<<<<

சுதந்திர தின விழா வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலும் உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

மாநிலங்களில் அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

டாக்காவில் உள்ள பங்களாதேஷுக்கான இந்திய தூதரகத்தில் இந்திய தூதர் திரு. பிரணாய் வர்மா தேசியக்கோடி ஏற்றி வைத்தார்.

*இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் அந்நாட்டுக்கான தூதர் திரு. சந்தோஷ் ஜா, மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார்.*

*முன்னதாக அவர், கொழும்பில் உள்ள இந்திய அமைதி காக்கும் படை வீரர்களின் நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.*

*>>>>><<<<<*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி, தில்லி செங்கோட்டையில் தொடர்ந்து 12வது முறையாக தேசியக்கொடியை ஏற்றி வைத்தது பெருமைமிக்க தருணம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத்தந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இந்நாளில் மரியாதை செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*அவர்கள் கனவு கண்ட வலிமையான சுயசார்புடைய மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில் தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*தமிழகத்திலும் சுதந்திர தின விழா உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.*

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மூவர்ணக் கொடியை ஏற்றிவைத்து, பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.*

*விழாவில் பேசிய முதலமைச்சர், திமுக ஆட்சிக் காலத்தில் தான் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டதாக கூறினார்.*

*சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 22 ஆயிரம் ரூபாயாகவும், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதாரர்கள், வ.உ.சி உள்ளிட்டோரின் வாரிசுகளுக்கான சிறப்பு ஓய்வூதியம் 11 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.*

தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு சென்னை, மாதவரத்தில் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தங்கும் விடுதி கட்டப்படுவதுடன், மாற்றுத் திறனாளிகளுக்கான கட்டணமில்லா பயணத் திட்டம், மலைப்பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பது உள்ளிட்ட 9 அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இணையவழி திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இந்த விழாவில், துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி துளசிமதி முருகேசனுக்கு வழங்கப்பட்டது.

அப்துல் கலாம் விருது, இஸ்ரோ தலைவர் திரு. நாராயணனுக்கும், தகைசால் தமிழர் விருது திரு. காதர் மொகிதீனுக்கும் வழங்கப்பட்டது.

>>>>><<<<<

சுதந்திர தின விழா, சென்னையில் உள்ள மத்திய மாநில அரசு அலுவலகங்களில் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் தலைமை நீதிபதி திரு. ஸ்ரீவஸ்தவா தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், துணைத் தலைமை இயக்குநர் திருமதி. வாசுகி, மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்தார்.

தெற்கு ரயில்வே சார்பில் சென்னை பெரம்பூரில் உள்ள ரயில்வே மைதானத்தில் அதன் பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் மூவர்ணக் கொடியை ஏற்றினார்.

ஐசிஎஃப் வளாகத்தில் அதன் பொது மேலாளர் திரு. சுப்பாராவும், பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல அலுவலகத்தில் சென்னை வட்ட தலைமைப் பொதுமேலாளர் திரு. விவேகானந்தா சோபேயும் தேசியக்கொடியை ஏற்றி வைத்தனர்.

சுங்கவரி அலுவலகத்தில் மண்டல முதன்மை தலைமை ஆணையர் திரு. குமாரும், வருமான வரி தலைமையகத்தில் முதன்மை தலைமை ஆணையர் திரு. நாகேந்திர பிரசாத்தும், பாரத மிகுமின் மண்டல அலுவலகத்தில் அதன் செயல் இயக்குநர் திரு. வினோத் ஜேக்கப் சாமும் தேசியக்கொடியை ஏற்றி வைத்தனர்.

*இதேபோன்று, GST Bhavan, சென்னை விமான நிலையம் உள்ளிட்ட இடங்களிலும் சுதந்திர தின விழா விமரிசையாக கொண்டாடப்பட்டது.*

*>>>>><<<<<*

*ஜம்மு கஷ்மீரின், கிஸ்துவார் பகுதியில் கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கவும், மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.*

*துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு மீட்புப் பணிகளின் நிலவரம் குறித்து கேட்டறிந்த பிரதமர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரிகள், தேவையான உதவிகளை வழங்கி வருவதாக தமது சமூகவலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*பிரிஸ்பனில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய-ஏ அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில, 9 விக்கெட் இழப்புக்கு 265 ரன் எடுத்தது.*

*266 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா-ஏ அணி 49 புள்ளி ஐந்து ஓவரில் 8 விக்கெட்டுகளை இழந்து, வெற்றி இலக்கை எட்டியது.*

*மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று, இந்தியா-ஏ தொடரை கைப்பற்றியது.*

*>>>>><<<<<*

*இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*